2014 ஜனவரி 31]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை இரத்து செய்துவிட்டது என்று சொல்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. அதைத் தெளிவுபடுத்தவேண்டும். இன்னொன்று, 2008 ஆம் ஆண்டு உங்களுடைய ஆட்சியிலேதான் அது இரத்து செய்யப்பட்டது என்பதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். ஆனால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏதோ மாண்புமிகு அம்மா ஆட்சியில் நடந்ததைப்போல உண்மைக்குப் புறம்பாகச் சொல்கின்றார்கள். நீங்கள் அதற்கு ஆதாரம் கொடுத்தால் நிச்சயமாக நான் ஏற்றுக்கொள்கின்றேன். இருந்தாலும் நான் விவாதத்திற்குள் செல்ல விரும்பவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செண்பகராமன்புதூரில் 115 ஏக்கர் நிலத்தை இப்போது கண்டறிந்து இருக்கின்றது. இன்னும் 150 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியதற்குப் பின்னால், புதிய தொழிற்சாலை, கடல்சார் வாரியம், பொறியியல் துறை மற்றும் இரப்பர் தொழிற்சாலை ஆகிய மூன்றையும் சேர்த்துக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். 2008 ஆம் ஆண்டு டிட்கோவுடன் Joint Venture இருந்ததை உங்களுடைய அரசுதான் cancel செய்தது என்பதை மீண்டும் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

14—

போக்குவரத்துப் பணிமனை

***7204—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, கள்ளிக்குப்பம் பகுதியில் மாநகர போக்குவரத்துக் கழகப் பணிமனை மற்றும் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு உட்பட்ட அம்பத்தூர் தொகுதி, கள்ளிக்குப்பம் பகுதியில் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பணிமனை மற்றும் பேருந்து நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிலத்தினைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கிடைக்கப்பெற்றபின், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.*

திரு. எஸ். வேதாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். அம்பத்தூர் தொகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். அந்தப் பகுதியிலே போக்குவரத்துப் பணிமனை வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அம்மா அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். இதை நிறைவேற்றும்வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே இடம் தந்தால் பணிமனை அமைத்துத் தருவேன் என்று சொல்கிறார்கள். அங்கே பணிமனை அமைப்பதற்காக ஏற்கெனவே நகராட்சி மூலமாக 15 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்த ஆண்டே எனது கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நேசிக்கும் தலைமை, மக்களை நேசிக்கும் தலைமை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் 23-10-2013 அன்று கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்ட, சென்னை மாநகர மக்களிடம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ள 50*

2014 ஜனவரி 31]

சிற்றுந்துகளில் (Small Bus) 23-10-2013 முதல் 30-1-2014 வரையுள்ள 100 நாட்களில் 36 இலட்சத்து 96 ஆயிரத்து 639 பேர் பயணம் செய்து, மிகப் பெரிய ஒரு வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனைத் திட்டமான சிற்றுந்துகள் சென்னையில் மிகப் பெரிய ஒரு வரவேற்பைப் பெற்று, 2 கோடியே 52 இலட்சத்து 89 ஆயிரத்து 645 ரூபாய் வருவாயை ஈட்டியுள்ளது. 100 நாட்களில் 36 இலட்சத்து 96 ஆயிரத்து 639 பேர் பயணம் செய்துள்ளார்கள் என்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய இந்தச் சாதனைத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களிடத்தில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இரண்டரை ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் புதிய பணிமனைகள் கட்டவேண்டுமோ, அந்தந்தப் பகுதிகளின் தேவைக்கேற்ப 68 புதிய பணிமனைகளை அமைப்பதற்கு உத்தரவிட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கள்ளிக்குப்பம் பகுதியில் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த நிலம் துறைக்குக் கிடைக்கப் பெற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.

திரு. எஸ். வேதாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்று நான் வைத்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியாக செய்து தருகிறேன் என்று உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், கோடானுகோடி நன்றிகளைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.